## 35. உம் சித்தம்போல் பயன்படுத்தும்

### பல்லவி

உம் சித்தம்போல் பயன்படுத்தும்
உம் திட்டம் போல் உருவாக்கும்
குயவனே.... குயவனே....
உம் கரத்தில் களிமண் நான்

### சரணங்கள்

1. எஜமானனே எஜமானனே
உமது வேலைகாரன் நான்
உம் கரத்தை நோக்கியுள்ளேன்
நீரே என்னை போஷிப்பீர்
- உம் சித்தம்போல்

2. ஒத்தாசை செய்யும் பர்வதமே
உம்மையே நம்பியுள்ளேன்
என் தேவையை அறிந்தவரே
திருப்தியாக்கி நடத்திடுவீர்
- உம் சித்தம்போல்

3. என் சுகத்தை விரும்பும் பொறுப்பாளரே
என் ஆரோக்கியத்தின் ஊற்றே
எனக்காய் பரிதபிக்கிறீர்
எனக்காய் வழக்காடுவீர்
- உம் சித்தம்போல்